**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

தேதி : 19.06.2025 - நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி சைப்ரஸ், கனடா, **குரோயேசியா** ஆகிய நாடுகளுக்கான பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, இன்று புதுடெல்லி திரும்பியுள்ளார்.

புதுச்சேரியில் **ஆன்மீக சுற்றுலா**வை மேம்படுத்த, முழு வீச்சில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக, **துணை நிலை ஆளுநர்** திரு கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் **11 ஆவது சர்வதேச யோகா தினத்**தை கொண்டாட, பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

புதுச்சேரியில் **மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை**யில் பணிபுரியும் சமூக வல்லுநர்கள், மற்றும், **சமூக வள நபர்**களுக்கு, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, **ஊதிய உயர்வு ஆணை** வழங்கினார்.

மோடி 1 (12)

பிரதமர் திரு நரேந்திர மோடி சைப்ரஸ், கனடா, **குரோயேசியா** ஆகிய நாடுகளுக்கான பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு இன்று புதுடெல்லி திரும்பியுள்ளார். முன்னதாக, **குரோயேசியா**வின் **ஜாக்ரேப்** நகரில், அந்நாட்டின் பிரதமர் திரு ஆந்த்ரே **பிளங்கோவிச்**-சை அவர் சந்தித்து, பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தியாவிற்கும், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் இடையிலான வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தைகளை மேலும் முன்னெடுத்து சென்று, விரைவில் இறுதி செய்வது குறித்து, இருதலைவர்களும் விவாதித்தனர். இத்தகைய உடன்பாட்டினால் வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பிற்கான புதிய வாய்ப்புகள் உருவாகும் என்பதை இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். இதுகுறித்து கூடுதல் விபரங்கள்.........

**(வாய்ஸ்)**

மோடி 2 (16)

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், குரோயேசிய பிரதமருக்கும் இடையிலான பேச்சவார்த்தைகளை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, வேளாண்மை, கலாச்சார பரிமாற்றம், அறிவியல்-தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. **ஜாக்ரேப்** பல்கலைக் கழகத்தில் ஹிந்தி இருக்கை ஒன்றை அமைப்பதற்கான ஒப்பந்தமும் இதில் அடங்கும். கூட்டு ராணுவப் பயிற்சி, மற்றும் தொழிற்சாலைகள் நிலையிலான ஒத்துழைப்பு குறித்து நீண்ட காலத் திட்டங்களை உருவாக்கவும், இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

ஐரோப்பியா-ஆசியா போன்ற எந்த ஒரு பிராந்தியத்திலும், அமைதியான முறையில்தான் பிணக்குகளுக்கு தீர்வு காண வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்த சந்திப்பின் போது வலியுறுத்தினார். எந்த பிரச்சனைக்கும் போர்க் களத்தில் தீர்வு கிடைக்காது என்றும், பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகளே தீர்வுக்கு வழி என்றும் அவர் கூறினார். பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலை தொடர்ந்து, இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு, குரோயேசியா வெளிப்படுத்தி உள்ள ஆதரவிற்கு, பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மோடி-தரவரிசை (12)

பல்கலைக் கழகங்களுக்கான, QS உலகத் தர வரிசைப் பட்டியலில் இவ்வாண்டு 54 இந்திய உயர் கல்வி நிறுவனங்கள் இடம் பெற்று சாதனை படைத்திருப்பது, உலக அளவிலான கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறையில் இந்தியாவின் அந்தஸ்து உயர்ந்து வருவதன் அடையாளம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இந்த சாதனை குறித்து, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவிற்கான பதிலில் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். இந்திய இளைஞர்களின் நன்மைக்காக, நாட்டின் கல்வி மற்றும் புதுமையாக்கச் சூழலை தொடர்ந்து மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 2014 ஆம் ஆண்டில், 11 இந்திய பல்கலைக் கழகங்கள் மட்டுமே உலகத் தர வரிசைப் பட்டியலில் இடம் பெற்ற நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 5 மடங்கு அதிகரித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

பதினொரு ஆண்டு (9)

நாடு முழுவதும் பழங்குடி சமூகத்தினரின் வாழ்வில் முக்கிய மாற்றங்களை கொண்டு வர அரசு பாடுபட்டு வருவதாக மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு ஜூயல் ஓராம் கூறியுள்ளார். பழங்குடி சமூகத்தினர் வளர்ச்சியில் பின்தங்கி போவதை தடுக்க தமது அமைச்சகம் கடந்த பதினொரு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி இருப்பதாக, புதுடெல்லியில் இன்று ஆகாஷ்வாணிக்கு அளித்த பிரத்யேக பேட்டியில் அவர் கூறினார். இதில் ஒரு திட்டமான ஏகலவ்யா - முன்மாதிரி உறைவிடப் பள்ளி திட்டத்தினால் மாணவர்கள் பெருமளவில் பயன் பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

சிக்கிள் செல் (11)

சிக்கிள் செல் ரத்த சோகை நோயினால் பாதிக்கப் பட்டவர்களின் பிரச்சனைகளை அனைவரும் புரிந்து கொண்டு, இவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவும், இந்நோய்க்கு எதிராக சமூகத்தில் நிலவும் களங்கத்தை துடைக்கவும் முன் வர வேண்டும் என மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜே பி நட்டா கேட்டுக் கொண்டுள்ளார். உலக சிக்கிள்செல் ரத்த சோகை விழிப்புணர்வு தினத்தை ஒட்டி, இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். இந்நோய் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்தவும், நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சை அளிக்கவும், தொடர்புடைய ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கவும், உரிய தருணமாக இந்நாள் அமைந்திருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கைலாஷ்நாதன் (12)

புதுச்சேரியில் ஆன்மீக சுற்றுலாவை மேம்படுத்த, முழு வீச்சில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறியுள்ளார். மதுரையில் நடைபெறும் முருக பக்தர்கள் மாநாட்டில் இன்று அவர் கலந்து கொண்டு, அங்கு நிறுவப்பட்டுள்ள **அறுபடை வீடு** முருகக் கடவுளை வழிபட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், புதுச்சேரியில் பழமையான கோவில்களும், சித்தர் பீடங்களும் அதிகம் இருப்பதால், ஆன்மீக சுற்றுலாவை மேம்படுத்த ஏராளமான வாய்ப்புகள் இருப்பதாக கூறினார். முன்னதாக, மாநாட்டில் அவர் பேசுகையில், முருக பக்தர் என்ற முறையில் தாம், இம் மாநாட்டிற்கு வந்திருப்பதாகவும், தமிழகத்தில் படித்து வளர்ந்து, குஜராத்தில் 45 ஆண்டுகள் பணிபுரிந்த பிறகும், முருக கடவுள் மீதான பக்தியை தாம் விடவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

*புதுச்சேரி யோகா* 1 (17)

புதுச்சேரியில் 11 ஆவது சர்வதேச யோகா தினத்தை கொண்டாட பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. உடல் நலம், நிலைத்தன்மை, ஒற்றுமை உள்ளிட்ட கருப்பொருட்களின் அடிப்படையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரியில் உள்ள **மண்டல சித்த மருத்துவ ஆராய்ச்சி கழகம்**, கொண்டாட்டம் குறித்த மத்திய-மாநில அரசுகளின் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதற்கான மைய ஏஜென்சியாக செயல்பட்டு வருகிறது. சர்வதேச யோகா தின கொண்டாடங்களின் முக்கிய பகுதியாக, புதுச்சேரியில் 4 இடங்களில் யோகா சங்கம் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரி பல்கலைக் கழகம், லாஸ்பேட் விளையாட்டரங்கம், பொறையூர் ஆதித்யா வித்யாஸ்ரம் உறைவிடப் பள்ளி, வில்லியனூர் சம்பூர்ண வித்யாலயம் ஆகியன இந்நான்கு இடங்களாகும். பல்கலைக்கழகத்தின் சமுதாய கல்லூரி, அரசு மகளிர் பொறியியல் கல்லூரி மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் ஒத்துழைப்புடன் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இது அல்லாது, புதுச்சேரி முழுவதிலும் சுமார் 500 இடங்களில் தனிப்பட்ட முறையிலான யோகா அமர்வுகளும் நடைபெற உள்ளதாக மண்டல சித்த

*புதுச்சேரி யோகா 2* (7)

மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் ஆராய்ச்சி அலுவலரும், யோகா தின கொண்டாடங்களுக்கான ஒருங்கிணைப்பு அதிகாரியுமான, டாக்டர் சண்முக ராம், எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். தனிப்பட்ட அமைப்புகள் மற்றும் நபர்கள், இணைய தளத்தில் பதிவு பெற்று யோகா அமர்வுகளை நடத்தி, புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பதிவேற்றம் செய்வதன் மூலம், சான்றிதழ் பெறலாம் என்று அவர் தெரிவித்தார். டாக்டர் சண்முக ராம் பேட்டியில் இருந்து ஒரு பகுதி…….

**(வாய்ஸ்- சண்முக ராம்)**

*ரங்கசாமி ஊதிய உயர்வு* (11)

புதுச்சேரியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பணிபுரியும் சமூக வல்லுநர்கள், மற்றும் **சமூக வள நபர்**களின் தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்குவதற்கான ஆணையை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி பயனாளிகளிடம் வழங்கினார். இதன்படி, சமூக வல்லுநர்களின் 8 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம், 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. **சமூக வள நபர்**களின் தொகுப்பூதியம், 13 ஆயிரத்து 500 ரூபாய், அல்லது, 12 ஆயிரத்து 500 ரூபாயாக அதிகரிக்கப் பட்டுள்ளது. சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கள் ஆகியோரும் உடனிருந்தனர்.

*காரை-மாங்கனி* (7)

காரைக்காலில் புகழ்பெற்ற காரைக்கால் அம்மையார் கோவில் மாங்கனி திருவிழா, இவ்வாண்டு, ஜூலை 8 முதல், 11 ஆம் தேதி வரை விமர்சையாக நடைபெற உள்ளது. கோவிலில் அண்மையில், **பந்தக்கால் முகூர்த்தம் நடத்தப்பட்டு**, ஏற்பாடுகள் தொடங்கி உள்ளன. விழாவின் முக்கிய பகுதியான **மாங்கனி இறைத்தல்** வைபவம், ஜூலை 10 ஆம் தேதி நடைபெறும். அன்று காலை பிச்சாண்டவர் பவழக்கால் சப்பரத்தில் வீதி உலா வரும்போது, பக்தர்கள் மாங்கனைகளை இறைத்து வழிபடுவர்.

*வானொலி நாடகம் (11)*

புதுச்சேரி ஆகாஷ்வாணி நிலையத்தில் ஒலிபரப்பாகும் வானொலி நாடகங்களில் பங்கு பெற, **நடிப்புத் திறன் தேர்வு** நடைபெற உள்ளது. புதுச்சேரி, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், திருவண்ணாமலை வட்டம், மற்றும், காரைக்கால் பகுதிகளை சேர்ந்தவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பக் கட்டணமாக, 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 250 ரூபாய்க்கும், 18 வயதிற்கு உட்பட்டவர்கள் 200 ரூபாய்க்கும், **Drawing & Disbursing Officer, Akashvani, Chennai** என்ற பெயரில் **மணியார்டர் ரசீது** எடுத்து வந்து, கோரிமேடு இந்திராநகரில் உள்ள ஆகாஷ்வாணி நிலையத்தில், விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி நாள், ஜூலை 11 ஆம் தேதியாகும்.

வானிலை (8)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 25 ஆம் தேதி வரை, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் நிலையில், ஒரு சில இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இடைத் தேர்தல் (5)

4 மாநிலங்களுக்கு உட்பட்ட 5 சட்டப்பேரவை தொகுதிகளில் இடைத் தேர்தல் வாக்குப் பதிவு இன்று நடைபெற்றது. குஜராத் மாநிலம் விசாவதர், கடி ஆகிய தொகுதிகளும், கேரள மாநிலம் நிலாம்பூர், பஞ்சாப் மாநிலம் லூதியானா, மேற்கு வங்க மாநிலம் காளிகஞ்ச் தொகுதியும் இதில் அடங்கும். இந்த 5 தொகுதிகளிலும் பதிவான வாக்குகள், வரும் திங்கட்கிழமை எண்ணப்படும்.